# சைவ சமயம்

## பிரிவு - 1

சைவ சமயம் எமது சமயம். அன்பே இதன் ஆதாரம்.

சிவபெருமானே இதன் முழுமுதற் கடவுள்

அன்பினில் விளைந்த ஆரமுதமே அந்தச் சிவன்

எனவே சைவர்களாகிய நாம் - எல்லா உயிர்களிடத்தும்

அன்பு செலுத்த வேண்டும்.

சைவ சமயத்தவர்களாகிய நாம் - ஐந்து மகா பாவங்களைச் செய்யாதவர்களாக வாழ வேண்டும்.

- பொய் சொல்லக் கூடாது.
- புலால் உண்ணக்கூடாது.
- உயிர்க் கொலை செய்தல் ஆகாது.
- மதுபானம் அருந்தக் கூடாது.
- மனையாளைத்தவிர மற்றைய பெண்கள் மீது ஆசை கொள்ளக் கூடாது.

இவ்வாறு வாழும் சைவர்களே உண்மைச் சைவர்கள். மற்றையவர்கள் இவற்றைக் கடைப்பிடிக்க முயலவேண்டும் - சைவர்களாக வாழ முற்படவேண்டும். அல்லாவிட்டால் - அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழவேண்டிய சைவ சமயத்தவராக - நாம் சிறப்படைய முடியாது.

சைவர்களாக - பஞ்ச மா பாதகங்களையும் செய்யாமல் வாழ்பவர்களே சைவக் கோயில்களைக் கட்டுவதற்கும் - அவற்றை நடத்துவதற்கும் தகுதி உடையவர்கள் ஆவர். அல்லாதவிடத்துக் குளிக்கப் போய்ச் சேறு பூசிய கதையாகவே - யாவும் முடிந்துவிடும்.

பதியாகிய சிவனை - பசுக்களாகிய நாம் வணங்கி - எம் மீது படிந்துள்ள பாசங்களை அகற்றும் - ஒப்பற்ற வழியை - எமக்கு அளித்து நிற்பதே - சைவ சமயம்.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்!

(கருத்து மாறுபடாத முறையிலே பிள்ளைகளின் நாவிற்கேற்பச் சொற்களை மாற்றியமைக்க)